7. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்களுக்கு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய புத்தகங்கள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய புத்தகங்கள், பேரவைச் செயலக நூலகப் பிரிவு 2-ன்மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட உள்ளன. அவற்றை உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை—*தொடர்ச்சி*

(ஆ) கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கும் அஞ்சாத உறுதி கொண்ட அரிமா மங்கை, துணிவின் தலைமையகம், கேடு விளைவிப்பவர்களுக்குப் புயலாக, நாடி வருகிற நல்லவர்களுக்குத் தென்றலாக, பசித்து வருபவர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் அன்னையாக, பகைவர்களுக்கெல்லாம்...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *15 நிமிடங்கள்தான் உங்களுக்கு.*

திரு. ஆர். சாமி: *பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் mike-ஐ மட்டும் off பண்ணாமல் இருங்கள்; 15 நிமிடங்கள் போதும். பசித்து வருபவர்களுக்கு அறுசுவை விருந்து வழங்கும் அன்னையாக, பகை கொண்டோருக்கு எரிமலையாக, நல்லாட்சி தந்த நற்செயல் நாயகி, எங்களுடைய உயிரின் மேலான எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வணங்குவதோடு மட்டுமல்லாமல், நடந்து முடிந்த 13-வது சட்டமன்றத் தேர்தலில், கடந்த தேர்தலைவிட அதிகமாக வாக்களித்து என்னை வெற்றிபெறச் செய்த மேலூர் தொகுதி வாக்காளப்*